# சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பு

## நிர்வாக சுருக்கம்

### E1. திட்ட விளக்கம்:–

தமிழ்நாடு அரசு தற்போது உலக வங்கியின் ஆதரவுடன் செயல்படுத்திவரும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II ஆனது மாநில முக்கிய சாலை வலையமைப்பில் ஒரு பகுதியை மேம்படுத்தியும், பராமரித்தும் வருகிறது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II ல் ஏற்படும் இடையூறுகளைத் தடுக்க கூடுதல் நிதியுதவி வழங்குமாறு தமிழ்நாடு அரசு உலக வங்கியைக் கோரியுள்ளது. இக்கூடுதல் நிதியுதவி முதன்மை திட்டத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை கூறுகளுக்கு கூடுதல் ஆதாரங்களையும், நான்கு புதிய துணை கூறுகளை அறிமுகப்படுத்துவதற்கும் உதவுகிறது. 110 கி.மீ நீளமுள்ள ஏழு சாலைகளை மேம்படுத்துவதற்கு கூடுதல் நிதியும் மற்றும் இந்த 7 சாலைகளின் பராமரிப்பிற்கு தமிழ்நாடு அரசும் நிதியளிக்கும். இந்த திட்டம் சாலை பாதுகாப்பில் மிகுந்த கவனத்தை செலுத்துவதுடன் போக்குவரத்து மற்றும் தளவாட சேவைகளுக்கு நிறுவனஆதரவையும் வழங்கும். மற்றும் பூஜ்ஜிய வரவு செலவு திட்டம் உடைய தற்செயலான அவசரகால கூறுகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கூடுதல் நிதிக்கு ஏற்ப கட்டமைப்பு அணுகுமுறை ஏற்பாடுகள் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II ன் கீழ் நடைமுறைபடுத்தப்படுகிறது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II அமல்படுத்தியதிலிருந்து இன்று வரை கற்றுக் கொண்ட பாடங்கள், கூடுதல் நிதி உதவியால் அதிகரிக்கக்கூடிய இத்திட்டத்தின் நோக்கம் மற்றும் சுற்றுச்சூழல் விதிமுறைகளில் சமீபத்திய திருத்தங்கள், சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை சுற்றுச்சூழல் மேலாண்மை கட்டமைப்பில் (EMF) இணைப்பதன் மூலம் இக்கட்டமைப்பு சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பாக (ESMF) புதுப்பிக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பில் சுற்றுச்சூழல் பாதிப்புகள் அனைத்தையும் குறைப்பதற்கு மேலாண்மை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### E2 சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பின் (ESMF) நோக்கம் மற்றும் பயன்பாடு:–

அ. ஒட்டுமொத்த செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொறுப்புகளை திறம்பட நிர்வகிப்பதற்காக கட்டமைப்பை வழங்குதல்.

ஆ. சுற்றுச்சூழல் திட்டங்கள் ஒரு விரிவான, முறையான திட்டமிடப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட முறையில் நிர்வகிக்க உதவுதல்.

இ. வளங்களை ஒதுக்கீடு செய்தல், பொறுப்புகள், நடைமுறைகள் மற்றும் செயல்முறைகளை வழங்குதல் மற்றும் அமைப்பின் தொடர்ச்சியான முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவது ஆகியவற்றை நிவர்த்தி செய்தல், இவையாவும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பின் (ESMF) நோக்கங்களாகும். இக்கட்டமைப்பின் கீழ் உள்ள விதிகள் இந்திய மற்றும் தமிழ்நாடு அரசுகளின் விதிகள் சட்டரீதியாக பொருந்தக்கூடியதாகவும் உலக வங்கியின் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**E3. சட்டம் மற்றும் நிறுவன கட்டமைப்பு:–**

இந்திய அரசாங்கத்தின் சட்டங்கள், ஒழுங்கு முறைகள், விதிகள், உலக வங்கியின் கொள்கைகள் ஆகியவற்றை பின்பற்றுவதோடு சுற்றுச்சூழல் மற்றும் சமூகபாதுகாப்புகள் குறித்த வழிமுறைகளான

1. op 4.01 சுற்றுச்சூழல் மதிப்பீடு
2. op 4.04 இயற்கை வாழ்விடங்கள்.
3. op 4.36 காடுகள்
4. op 4.12 விருப்பமின்றி நிகழ்கின்ற மீள்குடியேற்றம். (Involuntary)
5. op 4.10 பழங்குடிமக்கள் மற்றும்
6. op 4.11 புவிசார்ந்த கலாச்சார வளங்கள், ஆகியவை திட்டங்களுக்கு பொருந்தக் கூடியதாக பின்பற்றப்படும்.

**E4. சட்டரீதியான அனுமதிகளின் சுருக்கம்–**

**A. முன்கட்டநிலை (திட்ட செயல்படுத்துதல் பிரிவின் பொறுப்பு):–**

a) வனமற்ற பயன்பாட்டிற்காக வன நிலத்தை மாற்றம் செய்தல் (ஒதுக்கக் காடுகளின் வழியாக திட்ட சாலைகள் கடந்தால் பொருந்தும்).

b) சாலை ஒரங்களில் உள்ள மரங்களை அகற்ற அனுமதி.

c) சுற்றுச்சூழல் அனுமதி (தமிழ்நாடு சாலைமேம்பாட்டுத் திட்டம்–II கீழ் உள்ள மாநில நெடுஞ்சாலையின் திட்ட சாலை (கடல் மட்டத்திலிருந்து 1000.மீ மேல்) மலைப்பாங்கான பகுதியில் இருப்பின் பொருந்தும்)

d) வன உயிரின அனுமதி (தேசிய பூங்கா, வனவிலங்கு சரணாலயம், பறவைகள் சரணாலயம், உள்ளிட்ட பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் வழியாக திட்ட சாலை சென்றால் பொருந்தும்)

e) சுற்றுச்சூழல் உணர்வு மண்டலத்திற்கான (Eco – Sensitive Zone) அனுமதி (தேசிய பூங்கா, வனவிலங்கு சரணாலயம், பறவைகள் சரணாலயம், புலிகள் காப்பகம் உள்ளிட்ட பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் சுற்றுச்சூழல் உணர்வு மண்டலத்தின் வழியாக திட்ட சாலைகள் கடந்து சென்றால் பொருந்தும்).

**B) கட்டுமான நிலை (ஒப்பந்தக்காரர் ொபறுப்பு):–**

- சூடான கலவை ஆலை, நொறுக்கிகள், தொகுதி ஆலை மற்றும் தொழிலாளர் முகாம்களை நிறுவி மற்றும் செயல்படுத்த ஒப்புதல்
- அபாயகரமான கழிவுகளை அகற்றுவதற்கான அங்கீகாரம்
- நதி படுக்கையிலிருந்து மணல் சுரங்கத்திற்கு அனுமதி
- புதிய குவாரி திறக்க அனுமதி
- அபாயகரமான இரசாயனங்கள் (எரிபொருள் எண்ணெய்கள்) மற்றும் வெடிபொருட்கள் சேமிப்பு
- நிலத்தடி நீரை திரும்பப் பெற அனுமதி
- மாசுபாட்டை கட்டுபடுத்த சான்றிதழ்
- தொழிலாளர்களை நியமித்தல் மற்றும்
- தொழிலாளர்கள் பதிவு

**E5.சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதிப்பு மதிப்பீட்டை நடத்துவதற்கான செயல்முறை:–**

துணைத் திட்டங்களில் சேர்ப்பது அல்லது விளக்குவதைப்பற்றி தீர்மானிப்பதற்காகவும், வரையறுக்கப்பட்ட அளவுகோள்களின் அடிப்படையில் திட்ட சாலைகளை வகைப்படுத்தி, அவற்றிற்கு முழு அளவிலான சுற்றுச்சூழல் சமூக பாதிப்பு மதிப்பீடு (ESIA) மற்றும் சுற்றுச்சூழல் சமூக மேலாண்மை கட்டமைப்பு அல்லது பொதுவான சுற்றுச்சூழல் சமூக மேலாண்மை திட்டம் பயன்படுத்தி அவற்றை நிர்வகிப்பதற்கான செயல்முறையை, சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பானது விவரிக்கிறது. மேலும் சோதனையிடுதல், வாய்ப்புகளை கண்டறிதல்

பாதிப்புகளை மதிப்பிடுதல், தணிப்பு நடவக்கைகளை ஏல ஆவணத்தில் இணைத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான செயல்முறை, நிறுவன வழிமுறை மற்றும் வரவு செலவு திட்டத்தை இச்சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பு விவரிக்கிறது. சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களுக்கு ஏற்ப வகைப்படுத்தப்படும்.

உணர்திறன், மாறுபட்ட மற்றும் முன்னோடியில்லாத குறிப்பிடத்தக்க பாதகமான சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய துணை திட்டங்களை, சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீடு செய்வது அவசியமாக்குவதாக இருந்தால் E1/S1 என வகைப்படுத்தப்டுகிறது. எதிர்பார்த்த எதிர்மறை தாக்கங்களை கவனித்துக் கொள்ள இத்துணைத் திட்டங்களுக்கு விரிவான தளம், சுற்றுச்சூழல் குறித்த செயல்பாடு மற்றும் சமூக மதிப்பீடு, திட்ட தாக்க அடையாளம் மற்றும் குறிப்பிட்ட தணிப்பு நடவடிக்கைகள் ஆகியவை வேண்டும். மனித மக்கள் தொகைக்கும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம். வாய்ந்த பகுதிகளிலும் பாதகமான சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய துணை திட்டங்கள் A வகையை விட குறைவான பாதிப்பை தருவதாகயிருந்தால் இத்துணை திட்டம் E2/S2 என வகைப்படுத்தப்டுகிறது. குறைந்த அல்லது எந்தவொரு எதிர்மறையான சுற்றுச்சூழல் மற்றும் சமூகதாக்கங்கள் இல்லை என்று எதிர்பார்க்கப்படும். துணை திட்டம் E3/S3 என வகைப்படுத்தப்டுகிறது. ஏனவே E3/S3 திட்டத்திற்கு சுற்றுச்சூழல் மற்றும் சமூக மதிப்பீடு எதுவும் தேலையில்லை. ஒரு துணைத்திட்டத்தில் உள்ள துணைக்கூறுகளில் ஒன்றுக்கு மேற்பட்டவை இருந்தால் எந்தவொரு துணைக் கூறுகளுக்கும் பொருந்தக்கூடிய உயர் வகையை ஒட்டு மொத்தமாக துணைத் திட்டத்திற்கான வகையாகக் கருதப்படும்.

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பானது, திட்ட சோதனை, தாக்கமதிப்பீடு, நிறுவன கட்டமைப்பை செயல்படுத்துதல் மற்றும் அக்கட்டமைப்பின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு நிலைகள், குறிப்பிட்ட தளத்தில் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை திட்டத்தை உருவாக்கி ஒப்பந்த ஆவணங்களில் இணைத்தல் சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம், மேற்பார்வை மற்றும் அறிக்கையிடல் மற்றும் துணை திட்ட அளவில் சுற்றுச்சூழல் நிர்வாகத்தின் செயல்திறனை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய துணைத்திட்ட, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு தயாரிப்பதற்கான வழிகாட்டுதனை வழங்குகிறது. இழப்பீடு அல்லது வாழ்வாதாரம் அல்லது தங்குமிடம் இழப்புக்கு எதிராக கையகப்படுத்தும் நிலத்தை உள்ளடக்கிய துணை திட்டத்தை நிவர்த்தி செய்வதற்காக மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கை

திட்டத்தை தயாரிக்கவும் மற்றும் அவற்றின் தேவைகள் குறித்து வழிகாட்டவும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பு உதவுகிறது. சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பானது ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் தாக்கமதிப்பீட்டிற்கான தேவை மற்றும் செயல்முறை குறித்த வழிகாட்டுதலையும் வழங்குகிறது. மற்றும் கூடுதல் நிதியுதவியின் கீழ் பல துணைத்திட்ட இடங்கள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை அல்லது வடிவமைப்பு தயாரிப்பில் உள்ளது மற்றும் செயல்படுத்தப்பட்ட துணைத்திட்டங்களில் ஒட்டுமொத்த தாக்கங்களுக்கான சாத்திய கூறுகளை கொண்டுள்ளன.

## E.6 செயல்படுத்துதல் ஏற்பாடு:–

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தற்போது செயல்பட்டு கொண்டிருக்கும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேம்பாட்டு பிரிவுகள் தொடர்ந்து கூடுதல் நிதியுதவியினால் செயல்படுத்தப்படும் திட்டங்களையும் கண்காணிக்கும். ஒழுங்குமுறை முகவர், கடன் வழங்கும் முகவர் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு செய்யப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூக கடமைகளை செயல்படுத்துவதை உறுதிசெய்வதற்கு, திட்ட செயல்படுத்துதல் பிரிவு, கட்டுமான மேற்பார்வை ஆலோசகர் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியவர்கள் முதன்மையானவர்களாக உள்ளனர். சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்பு ஆவணத்தில் அவர்களின் பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.